

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.06.2025 அன்று மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கி துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டை நேருஜி கலையரங்கில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன்கள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

### தேனி மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## தேனியில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் – அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு!

தேனி, ஜுன். 14-

தேனி மாவட்டத்திற்கு வருகின்ற 16 ம் தேதி வருகை தரும் துணை முதல்வர், மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து அனைத்து துறை அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

பின்னர் தேனி பாராளுமன்ற கட்சி அலுவலகத்தை திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து தேனி அருகிலுள்ள மதுராபுரியில் தனியார் திருமண மண்டபத்தில் , கட்சியில் உள்ள 23 சார்பு அணிகளைச் சேர்ந்த அமைப்பாளர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

இந்நிலையில் தேனி மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்பது குறித்த ஆலோசனை கூட்டம், தனியார் மண்டபத்தில், தேனி வடக்கு மாவட்ட செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச் செல்வன் தலைமை யில், சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் முன்னி லையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேனி மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ. பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் பேசிய அமைச்சர் வருகின்ற 15ம் தேதி மாலை தேனி மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு, தேனி நகரம் முழுவதும் வண்ண தோரணங்கள் மற்றும் கழக கொடிகள் கட்டி, பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு உற்சாக வரவேற்பு அளிக்கவேண்டும் .மேலும் 16 ம் தேதி நடைபெற உள்ள தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்தை சேர்ந்த 23 சார்பு அணிகளுடன் நடைபெறும் கூட்டத்திற்கும், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கூறினார்.

இக் கூட்டத்தில் .முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில், திருக்கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முருகேசன், சங்கர் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ரத்தின சபாபதி, கண்ணியாம்பட்டி முருகேசன். அய்யப்பன்,சக்கரவர்த்தி,எல்.எம் .பாண்டியன், நகர செயலாளர்கள் பாலமுருகன்.நாராயண பாண்டியன். புருஷோத்தமன், முகமது இலியாஸ், மற்றும் பேரூர் செயலாளர்கள், திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா சாத்தனூரில் இராமநாதபுரம் – மதுரை புதிய பேருந்து வழித்தடத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. துவக்கி வைத்தார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் இளையான்குடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆறு.செல்வராசன், அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு , மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து , விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வி.ப.ஜெயசிவன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 834 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 10,242 மகளிர்களுக்கு ரூ 85.96 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார் .



மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோலைஅழகுபுரம் பகுதியில் உள்ள வாஞ்சிநாதன் தெருவில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் சுவிதா விமல், கழக நிர்வாகிகள் தனசெல்வம், ஜி.பி.ராஜா, சசிக்குமார், காவேரி, அன்பழகன், தவமணி, சுதன், மதிவெங்கடேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.




